10.08.2022 அ.வ.எண்.94/2016 வா.சா.1

<u>பெயர்:-</u> பொன்னுசாமி

சாட்சி ஆஜர், சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

<u>1 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

1. எனக்கு தமிழ் எழுத படிக்கத்தெரியும். என்னிடம் காட்டப்படும் 24.08.1954 தேதிய பாகப்பிரிவினை பத்திரம் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏராமன்னநாய்க்கன் மகன் சின்னமாரநாய்க்கர் (1). சின்னமாரநாய்க்கர் மக்கள் பெரியமாரநாய்க்கன் (2), சின்னமாரநாய்க்கன் (3), 1 இலக்கமிட்ட சின்னமாரநாய்க்கன் மனைவி திம்மக்காள் (4) ஆகியோர்கள்தான் ஏற்படுத்திக்கொண்ட பத்திரம் வா.சா.ஆ.1 என்றால் சரிதான்.

2. மேற்படி வா.சா.ஆ.1ன் நகலைத்தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றும் அசல் பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தின் அசல் எங்கு உள்ளது என்றால் இதுதான் அசல் பத்திரம் ஆகும். நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் தெரியாது. மேற்படி ஆவணத்தின் உண்மைநகல் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெரியமாரநாய்க்கன் என்பவர் எனது தகப்பனார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் 3வது நபராக உள்ள சின்னமாரநாய்க்கனின் மனைவிதான் 1ம்பிரதிவாதி என்றால் சரிதான்.

3. மேற்படி சின்னமாரநாய்க்கன் எனது சித்தப்பா ஆவர். மேற்படி சின்னமாரநாய்க்கருக்கும், 1 ம் பிரதிவாதிக்கும் சரோஜா, ரேவதி, சுகுணா, கவிதா மற்றும் சாவித்திரி ஆகியோர்கள் ஆவார்கள். அவர்களுடைய வாரிசுகள் அனைவரையும் இவ்வழக்கில் கட்சி சேர்த்துள்ளீர்களா என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 ல் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் இனம் பூமிக்குள்ள 2 பாத்தியங்கள் சகிதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். வழக்கு சொத்து புதுக்கலையனூர் கிராமம் பழைய க.ச.169 என்றால் சரிதான்.

4. மேற்படி ஆவணத்தில் 3 வது பக்கத்தில் 169 நம்பர் இனம் காலைக்கும் மேல்வாரத்துக்கும், குடிவாரத்திற்கும் சம்மந்தப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புதுக்கலையனூர் கிராமத்தின் பழைய க.ச. 169 கண்டுள்ள சொத்துக்கள் அனைத்தும் என்று சொன்னால் சரியல்ல. க.ச.எண்.169 காலையில் கண்டுள்ள சொத்துக்கள் அனைத்தும், மேல்வாரத்துக்கும், குடிவாரத்துக்கும் உண்டான சொத்துக்கள் என்றும், மேற்படி சொத்துக்குரிய கோதாவில் உரிமையாளர் என்ற நிலையும் ஆவணங்கள் எதுவும் எழுத முடியாது என்றால் சரியல்ல. எனது தாத்தா சின்னமாரநாய்க்கர் எப்போது இறந்தார் என்றால் 1958 ல் தான் இறந்தார். எனது தாத்தா இறப்பதற்கு முன்பு 14.01.1957 ம் தேதியில் உயில் எழுதி வைத்ததாக சொல்லியுள்ள நிலையில் மேற்படி ஆவணத்தின் அசலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம்.

5. 14.01.1957 ம் தேதிய ஆவணத்தின் அசலை நான் தாக்கல் செய்யவில்லை என்றும், சான்றிட்ட நகலைத்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால்

சரிதான். மேற்படி ஆவணத்தின் அசலை தாக்கல் செய்யாததற்கு காரணம் குறித்து வழக்குரையிலேயே, நிரூபண பத்திரிக்கையிலேயே குறிப்பிடதற்கு காரணம் சொல்லியுள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி உயில் ஆவணத்தின் அசல் ஆவணம் தொலைவிட்டதாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி உயில் யார், யாருக்கு எழுதி வைத்தது என்று எனது தாத்தா எனது அண்ணன் மல்லநாய்க்கர் பெயரில் எழுதி வைத்துள்ளார்.

6. அப்போது மல்லநாய்க்கர் உரிய வயது அடைந்தவரா என்றால் ஆமாம். மேற்படி உயிலின் சொத்துக்கள் அனைத்தும் எனது சகோதரருக்கு எழுதி வைக்கப்பட்டதா அல்லது மற்றவர் அனுபவித்து அதன் பின்பு அவருக்கு ஒப்படைக்கப்படவேண்டும் என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் எனது சகோதரர் அனுபவித்துக்கொள்ளவேண்டும் என்றுதான் எழுதப்பட்டுள்ளது. எனது தாத்தா 20.04.1957 ல் எனது தாத்தா சின்னமாரநாய்க்கர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 05.08.1957 ல் எனது சகோதரர் மல்ல நாய்க்கர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். தாவாசொத்து குடிவாரத்துக்கும், மேல்வாரத்துக்கும் பாத்தியப்பட்டது என்ற நிலையில் எனது தாத்தா இறப்பிற்கு பிறகு பழைய க.ச.179 ஏ, 124 ஏல் கண்டுள்ள சொத்துக்கள் எனது அப்பா பெரிய மார நாய்க்கருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி வழக்கு சொத்து எனது சித்தப்பா சின்னமாரநாய்க்கருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

7. 1957 ல் எனக்கு என்ன வயதிருக்கும் என்றால் நான் பிறக்கவே இல்லை. நான் 1960 ல் பிறந்தேன். 1957 ல் வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்பட்டு

சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான்.

1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

(Sd) பொன்னுசாமி